கோட்ட வன அலுவலர், சமூகவனக்கோட்டம், திண்டுக்கல் அவர்களின்
செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.அ.அன்பு, எம்.எஸ்சி.,
கோட்ட வன அலுவலர் (கூ/பொ)

செ.மு.ஆ.எண். 3307/2018/ப

நாள். 26 .2.2020

பொருள்: பணி – நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற தேர்வில் (தொகுதி – IIA) (2017–2018) – திரு.ப. கார்த்திகேயா, உதவியாளராக தெரிவு செய்யப்பட்டது – உதவியாளராக பணியில் சேர்ந்தது – பணியினை வரன்முறைப்படுத்துவது – தொடர்பாக.

பார்வை:
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை ந.க.எண்.6021/ / 2018 நாள் 01.11.2018.
2) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண். ண2/37899/2018 நாள் 12.11.2018.
3) தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல் ப.ஆ.எண். 56/2018/ப1 (ந.க.எண்.10476/2018) நாள் 28.11.2018.

******

திரு.ப. கார்த்திகேயா, உதவியாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம், நேரடி உதவியாளராகத் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2–ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதத்தின் மூலம் உதவியாளராக திண்டுக்கல் மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3–ல் காணும் தலைமை வனப்பாதுகாவலரின் பணியாணைப்படி திண்டுக்கல் மண்டல தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நேரடி உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 05.12.2018 முற்பகல் பணியில் சேர்ந்து, தற்போது பணிமாறுதலில் கோட்ட வன அலுவலகம், சமூக வனக்கோட்டம், திண்டுக்கல் அலுவலகத்தில் 01.02.2019 முற்பகல் முதல் நாளது தேதி வரையில் பணிபுரிந்து வருகிறார்.

திரு.ப. கார்த்திகேயா, உதவியாளரின் அரசுப்பணியானது பார்வை 2–ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் அறிவுரைப்படி, பணியில் சேர்ந்த நாளான 05.12.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள் சட்டம்) விதி 2016 பிரிவு 28(1)–ன் படி மூன்றாண்டுகளில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். நீவிர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் உரிய தேர்வுகளிலும், பவானிசாகர் நிலைய அடிப்படைப் பயிற்சியும் முடித்தல் வேண்டும்.

மேற்படி பணிவரன்முறையானது, 2017–2018 தொகுதி–IIA) பணிகளின் நியமனம் குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின், சென்னை மற்றும் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டது.

/மெய்நகல்/

கோட்ட வன அலுவலர், சமூக வனக் கோட்டம், திண்டுக்கல்.

கோட்ட வன அலுவலர் (கூ/பொ)
சமூகவனக்கோட்டம், திண்டுக்கல்.
26/2/2020

பெறுநர்
திரு.ப. கார்த்திகேயா, உதவியாளர், கோட்ட வன அலுவலகம், சமூக வனக்கோட்டம், திண்டுக்கல்
நகல் : முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்), சென்னைக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : பணிப்பதிவேடு (தகுதிகாண் பருவத்தினர் தாள் நகலுடன்)
நகல் : செயல்முறை ஆணை இருப்புக்கோப்பிற்கு